**செ.வெ.எண்:80** **நாள்:31.08.2021**

**நாமக்கல் மாவட்டம்**

**கல்லூரிகள் மற்றும் பள்ளிகள் திறக்கப்படுவதால் அரசின் நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை கடைப்பிடித்து, கொரோனா நோய்த்தொற்று பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளுதல் குறித்த ஆலோசனை கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

------

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், கல்லூரிகள் மற்றும் பள்ளிகள் திறக்கப்படுவதால், பள்ளி, கல்லூரி நிர்வாகிகளுடனான ஆலோசனை கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (31.08.2021) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் செப்டம்பர் -01 (01.09.2021) தேதி முதல் கல்லூரிகள் மற்றும் பள்ளிகள் திறக்கப்படுவதால், தமிழ்நாடு அரசின் கொரோனா நோய்த்தொற்று தடுப்பு வழிகாட்டி நெறிமுறைகள் கடைப்பிடிப்பது, கொரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல், தடுப்பூசி செலுத்தும் பணிகள் குறித்து அனைத்து பள்ளி, கல்லூரி நிர்வாகிகளுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆலோசனை மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செப்டம்பர்-1 (01.09.2021) முதல் கல்லூரிகள் மற்றும் பள்ளிகள் திறக்க உத்தரவிட்டுள்ளார்கள். அவ்வாறு கல்லூரிகள் மற்றும் பள்ளிகள் திறக்கப்படும் போது உரிய நிர்வாகங்கள் அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும். மேலும், அனைத்து ஆசிரியர்களும், பேராசிரியர்களும், பணியாளர்களும் கட்டாயம் தடுப்பூசி செலுத்திருக்க வேண்டுமென அரசு அறிவுறுத்தியுள்ளது.

மேலும், கல்லூரிகள், பள்ளிகளில் அனைத்து ஆசிரியர்கள், பணியாளர்கள் மற்றும் 18-வயது நிரம்பிய மாணவ, மாணவியர்கள் அனைவரும் கண்டிப்பாக கொரோனா நோய்த்தொற்று தடுப்பூசி செலுத்தி கொண்டு அதற்கான சான்றிதழை காண்பிக்க வேண்டும். எனவே, அனைத்து ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் கட்டாயம் கொரோனா தடுப்பூசி செலுத்தியிருக்க வேண்டும். அவ்வாறு செலுத்தாதவர்கள் அதற்கான உரிய சான்றிதழை சமர்பிக்க வேண்டும்.

பள்ளிகள், கல்லூரி வளாகத்தில் உள்ள அனைத்து நுழைவாயில்களிலும் கைகளை சுத்தம் செய்வதற்காக கிருமி நாசினி, தண்ணீர் மற்றும் சோப்பு கட்டாயம் வைத்திருக்க வேண்டும். உடல் வெப்ப நிலையை பரிசோதித்த பின்னரே வளாகத்திற்குள் அனுமதிக்க வேண்டும். மேலும் அனைவரும் கட்டாயம் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும்.

மேலும், மாணவ, மாணவியர்கள் கூட்டம் கூடுவதையும், ஒன்றாக சேர்ந்து செல்வதையும், தண்ணீர் அருந்தும் இடம் மற்றும் உணவு உண்ணும் இடங்களில் கூட்டமாக அமர்ந்து உண்பதை தவிர்க்க வேண்டும். பள்ளி, கல்லூரிகளில் மேசைகள், கதவு கைப்பிடிகள், ஜன்னல்கள் மற்றும் பேருந்துகளை உள்ளிட்டவற்றை கிருமி நாசினி கொண்டு சுத்திகரித்திட வேண்டும். கழிவறைகளை சுத்தமாக கிருமி நாசினி கொண்டு சுத்திகரித்திட வேண்டும்.

பேருந்துகளில் சமூக இடைவெளியை தவறாது கடைப்பிடித்திட வேண்டும். அனைவரும் ஒன்று கூடி பிரேயர் (வழிபாட்டு கூட்டம்) நடத்துவதை தவிர்த்திட வேண்டும். அனைவரும் கொரோனா தடுப்பு உறுதிமொழியை தவறாது எடுத்துக்கொண்டு கடைபிடிக்க வேண்டும். வளாகத்திற்குள் ஒலிபெருக்கிகளை வைத்து அவ்வப்போது விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். மாணவ, மாணவியர்களை பார்க்க வரும் பெற்றோர்களும் கட்டாயம் தடுப்பூசி செலுத்தியதற்கான சான்றிதழை வைத்திருந்தல் வேண்டும். சான்றிதழ் உள்ளவர்கள் மட்டுமே பள்ளியினுள்ளே அனுமதிக்க வேண்டும்.

பள்ளி, கல்லூரிகளை சுத்தம் செய்தல், குடிநீர் ஆதாரம் உள்ளிட்ட மறுசீரமைப்பு பணிகளை செய்திட வேண்டும். குடிநீரை சரியாக சுத்திகரித்து வழங்க வேண்டும். யாருக்கேனும் சளி, காய்ச்சல், இருமல் போன்ற சிறு அறிகுறிகள் தென்பட்டால் அவர்களை தனிமைப் படுத்துவதற்காக ஒவ்வொரு பள்ளி மற்றும் கல்லூரியிலும் தனி அறை ஒதுக்கப்பட வேண்டும். எனவே, அனைத்து பள்ளி ஆசிரியர்கள், கல்லூரி முதல்வர்கள் அரசின் வழிகாட்டி நெறிமுறைகளை கடைப்பிடித்து செயல்பட வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.துர்காமூர்த்தி, நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.கோட்டைக்குமார், திருச்செங்கோடு வருவாய் கோட்டாட்சியர் திருமதி.தே.இளவரசி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ரமேஷ், துணை இயக்குநர் (சுகாதாரம்) மரு.பிரபாகரன், முதன்மை கல்வி அலுவலர் திரு.அ.பாலுமுத்து, தனி வட்டாட்சியர் (பேரிடர் மேலாண்மை) திரு.பச்சைமுத்து உட்பட மாவட்ட கல்வி அலுவலர்கள், நகராட்சி ஆணையாளர்கள், வட்டாட்சியர்கள், சுகாதாரத்துறை அலுவலர்கள், கல்லூரி முதல்வர்கள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.